**Tamilmanam International Research Journal of Tamil Studies**
தமிழ்மணம் சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்
ISSN 3049-0723 (Online) · ISSN 3107-7781 (Print)

Vol. 20, No. 01 (Oct 2026), pp. 236–241
tamilmanam.in

RESEARCH ARTICLE · OPEN ACCESS

# சஞ்சாரம் நாவலில் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல்

**முனைவர்.பசுபதி த***

கௌரவவிரிவுரையாளர், தமிழ்த்துறை, அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, கோவில்பட்டி-*628502, India*

* Corresponding author / தொடர்பு ஆசிரியர்: முனைவர்.பசுபதி த — kkalagopi77@gmail.com

| Received / பெறப்பட்டது | Revised / திருத்தப்பட்டது | Accepted / ஏற்கப்பட்டது | Published / வெளியிடப்பட்டது |
|---|---|---|---|
| 1 October 2026 | — | 4 October 2026 | — |
| **DOI** | — | **Article ID / கட்டுரை எண்** | TAJP-2026-00054 |

**Abstract / ஆய்வுச்சுருக்கம்**

சஞ்சாசரம் நாவல் நாட்டிலுள்ள நாதஸ்வரக் கலைஞர்கள் மற்றும் சாதியம் சார்ந்த வாழ்க்கை முறையினை கரிசல் நிலத்தின் பின்னணியில் சமகால சவால்களுடன் விவரிக்கிறது. இந்நாவல் கலைஞர்களின் வாழ்வைப் புரிந்து கொள்;ள உதவும் ஒரு முக்கிய ஆவணமாகத் திகழ்கிறது. நாவலில் நாதஸ்வரக் கலைஞர்களின் கலைத்திறமையை மட்டும் பேசாமல் கலைத்திறமையின் அவலநிலை, சாதிய ஒடுக்குமுறைகள் மற்றும் இசையின்வழி அவர்களின் உணர்வுகளைப் படம்பிடித்துக் காட்டுகிறார். மேலும் அவர்கள் சமூகத்தில் கோவில் சார்ந்த சூழலில் எவ்வாறு நடத்தப்படுகிறார்கள் என்பதை எஸ் ராமகிருஷ்ணன் சுட்டிக்காட்டுகிறார்.

**Keywords / திறவுச்சொற்கள்:** சஞ்சாசரம் நாவல் ‘நாதஸ்வர கலைஞர்களின் அவலநிலை; சாதிய ஒடுக்குமுறையை மையாக கொண்டு ஆசிரியர் படைத்துள்ளார்.

**How to cite / மேற்கோள் காட்டும் முறை:** த, மு. (2026). சஞ்சாரம் நாவலில் நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல். Tamilmanam International Research Journal of Tamil Studies, 20(01). https://tamilmanam.in/?post_type=tajp_article&p=8737

## முன்னுரை

சஞ்சாரம் நாவல் தமிழ்நாட்டின் நாதஸ்வர கலைஞர்களின் வாழ்க்கையையும், அவர்கள் கலைப்பயணத்தில் எதிர்கொள்ளும் துன்பங்களையும், வறுமை, சாதிய ஒடுக்குமுறை மற்றும நாடோடித்தனமான வாழ்க்கைக்கும் இடையியலான போராட்டத்தைப் பதிவு செய்யும் ஆவணமாகவும், அடையாளமாகத் திகழ்வதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**நாதஸ்வரம் - நாதேஸ்வரம்:**

நாதஸ்வரம் என்பது துளைக்கருவி வகையைச் சேர்ந்த ஓர் இசைக் கருவியாகும். இது நாதசுவரம், நாதசுரம், நாகஸ்வரம், நாயனம் என்று பலவாறு

அழைக்கப்படுவது உண்டு. இது தென்னிந்தியா, இலங்கை போன்ற இடங்களிலும் தென்னிந்திய இனத்தவர் வாழும் உலகின் பிற பகுதிகளிலும் இந்த இசைக்கருவி வழக்கில் உள்ளது. திறந்த இடத்தில் இசைப்பதற்கு ஏற்றது. வெதுதூரத்தில் இருந்து கேட்டாலும் இன்பத்தைத் தரும் இயல்பினைக் கொண்டது. இதனை

“குழல்இனிது யாழ்இனிது என்பதம் மக்கள்

மழலைச்சொல் கேளா தவர்” [-1]

குழந்தையின் இனிய மழலைச் சொற்களுக்கு அடுத்ததாக இனிமையாக இருப்பது குழலும் யாழும்தான் என்று திருவள்ளுவரே குறிப்பிடுகின்றார்.

குழல் என்ற சொல் யாழ்ப்பாண சொல்வழக்கில் இருக்கிறது. இது நாதஸ்வரம் என்ற இசைக்கருவியை குறிப்பதாகும். இதை நாகஸ்வரம் என்று அழைப்பர். தமிழர்களின் இசை கருவிகளில் யாழும் முக்கியமானவை. புல்லாங்குழலையும் சங்க இலக்கியத்தில் குழல் என்று குறிப்பிடுவர். இவ்வாத்தியம் முன்பு தென்னிந்தியாவிலுள்ள நாகூர், நாகபட்டினம் முதலிய ஊர்களில் உள்ளவர்களான நாகசர்பத்தைத் தெய்வமாகப் பசித்த நாகர் என்ற சமூகத்தால் வாசிக்கப்பட்டு வந்தது. நாகம் போன்ற நீண்ட உருவத்தைப் பெற்ற காரணமாகவும் நாகஸ்வரம் என்னும் பெயர் ஏற்பட்டது. இதனுடைய இனிமையான நாதம் காரணமாக பிற்காலத்தில் இது நாதஸ்வரம் எனப்பட்டது. பல்லாண்டுகளாக திமரி என்னும் நாதஸ்வரமே வாசிக்கப்பட்டது.

நாதஸ்வரம் ஒரு பண்டைத்தமிழ் இசைக்கருவியாகத் தெரியவில்லை. சங்ககாலத் தமிழ் இலக்கியங்களோ அல்லது இடைக்கால இலக்கியங்களோ இந்த இசைக்கருவி தொடர்பான தகவல் எதையும் தரவில்லை. சிலப்பதிகாரத்தில் கூறப்படும் வங்கியம் என்னும் இசைக்கருவியுடன் இதனைத் தொடர்புபடுத்திச் சிலர் முயன்ற போதிலும் ஒரு புல்லாங்குழல் போன்ற ஒரு கருவியே என்று பலர் கருதுகிறார்கள். இது பற்றிய குறிப்புகளோ அல்லது அதனோடு தொடர்புடைய இசைக்கலைஞர் பற்றிய குறிப்புகளோ இதுவரை கிடைக்கவில்லை. இதன் துணை இசைக்கருவியாக விளங்குகின்ற தவிலும்கூட இத்தகவல் மூலங்கள் எதிலும் காணக்கிடைக்கவில்்லை. கி.பி.17ம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பாதசங்கிரகம் என்னும் நூலில் இது கூறப்படுகிறது.

“பரிகை நாதஸ்வரம் பொற்சின்னம் எக்காளை

தாரை நவரிசங்கு வாய்வீணை - வீரியஞ்சேர்

கொம்பு தித்தி காளை குழலுடன் ஈராறும்

இன்பார் துளைக்கருவி என்”்[-2].

என்று கூறப்பட்டுள்ளது. இதில்தான் முதல் முதலாக நாதஸ்வரத்தின் பெயர் கூறப்படுகிறது.

## நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல்

நாதஸ்வரக் கலைஞர்கள் சமூகத்தில் தாழ்ந்த சாதியினர் என்கிற ஒதுக்கல் அந்த கொடுமை நம்மை அவமானப்பட வைக்கிறது. நாதஸ்வரக் கலைஞர்கள் சமூகத்தில் தாழ்வானவர்களாக கருதப்படுகிறார்கள். இசைக்கருவிகளில் உயர்ந்தது நாதஸ்வரக் கருவிதான். அவ்வாறே இசையில் உயர்ந்தது நாதஸ்வர இசையே என்று அறியமுடிகின்றது. நாதஸ்வரத்திற்கு நிகர் வேறு எதுவுமில்லை. பலம் வேண்டும். மூச்சுப்பிடிக்கக்கூடிய உடல்வாகு வேண்டும். மணிக்கணக்கில் அயராது உழைக்கும்

தெம்பும், துணிவும் வேண்டும். அதனால்தான் இவ்வளவு சிரமத்துக்குள்ளாக்கும் இந்த இசைக்கருவியைக் பார்ப்பனர்கள் ஒதுக்கிவிட்டார்கள். அவர்களை அந்த மேதைகளை, வல்லுநர்களை நாவிதர்கள் என்றும், தீண்டத்தகாதவர்கள் என்றும், சாதிக்கட்டுப்பாடுகள் விதித்தனர் என்றும் பேசியுள்ளார். அதில் சில அடிமையாவதையும் சொல்லி வருத்தப்பட்டுள்ளார். நாவலின் முதல் அத்தியாயத்தின் முதல் வரியிலே ரத்தினம் என்கிற நாதஸ்வரக் கலைஞனின் பிடறியில் முதல் அடி விழுகிறது. அதிலும் கோயிலின் முன்னால் வாசித்துக்கொண்டிருக்கும்போதே விழுவது அதிலும் கேவலமாக,

> “தாயோளி நிறுததுறா, சாமிக்கு யாரு வில்லு குக்கிறதுங்கிற பிரச்சனையை முடியால, அதுக்குள்ளே வாயில வச்சி ஊத ஆரம்பிச்சீட்டீங்க”-3

வீரசின்னு என்கிற குடிகாரன் நாதஸ்வரக் கலைஞரை கேவலமான முறையில் பார்க்கிறான். நாதஸ்வரம் யானை தும்பிக்கையை உயர்த்துவதுபோல் நாதஸ்வரத்தை உயர்த்தி வளைவு போட்டு வாசிப்பது, நளினத்துடனும், குளுமையுடனும் குழைவோடு இசை காதை நிரப்புகிறது.

**இசைப் புலவர்களும், ராகங்களும்:-**

“சுவாமியின் புறப்பாட்டின்போது எக்காளம் திருச்சீரனம் உடல் கொட்டு, டவுன்டி மிருதங்கம் போன்ற இசைக் கருவிகள் முழுக்கமிட அழகிய முகப்படாம் பட்டி யானையின் அம்பாரி முன் செல்ல நாதஸ்வரம் வாசித்து வருவார்கள். நாதஸ்வர இசை மேதைகளான குழிக்கரை பிச்சையா, நல்லடை சண்முகசுந்தரம், வல்லம் தெட்சிணாமூர்த்தி போன்றோர் மல்லாரி வாசித்து வருவார்கள். மல்லாரியில் ரா மல்லாரி என்று அழைக்கப்படும் திரிபுடைதாள மல்லாரி வாசிக்கப்படும் நேரத்தைத்தான் எதிர்பார்த்துக் கொண்டிருப்பார்கள். ஒரு ஒத்து நான்குதவில்கள், மல்லாரிக்கு என்கிற சில நேரங்களில் 5 சிறப்பு தவில்களையும் அமைத்திருப்பார்கள்”-4.

நாதஸ்வர கலைஞர்கள் வாசிக்கும் ராகங்களையும் அந்த ராகங்களுக்குள்ள மகிமையும் ஆசிரியர் இசைப் புலவர் வர்ணிக்கிறார். தாரார், மோகனம், சக்கரவாகம், ரஞ்சினி, மணிரங்கு, தர்பாரி என இப்படி எத்தனையோ ராகங்களைக் குறிப்பிடுகிறார். நாதஸ்வரக் கலைஞர் ரத்தினம் எவ்வளவுதான் அவமானப்பட்டாலும், ஏமாற்றப்பட்டாலும் அவரிடம் மனிதாபிமானம் மிஞ்சி நிற்கிறது.

ஒரு நிகழ்ச்சியில் அவர் அவமானப்பட்டதோடு பேசிய தொகையும் கொடுக்கபடவில்லை. கசந்து போன ரத்தினம் ஈனப்பயலுக அவ்வளவு வீடு வசதி இருந்தும் நம்ம வயிற்றில் போய் அடிக்கிறாங்க. இந்தக் கல்யாணம் உருப்படாது. அவர்களுக்கு பிள்ளைகுட்டி பிறக்காது. விளங்காம போயிடுவாங்க என்று கூறுகிறார்கள். அதே குடும்பம் கார் விபத்தில் மொத்தமாக இறந்து விட்டதை அறிந்து, பாவம் இப்படி சாலை விபத்தில் செத்துப்போனார்களே என நினைத்து வருந்துகிறார். அதோடு மேலும் ஒரு ஆதங்கத்தை தெரிவிக்கிறான். பேசிய தொகை வராமல் போனதுடன், இப்படி கல்யாண வீடுகளில் நம்மை கூட்டி வந்து ஒருவரும் இசை கேட்காமல் அவமதிக்கிறார்களே என வருத்தப்படுவதோடு பிழைப்புக்காகப் போக வேண்டியிருக்கிறதே என சமாதானம் சொல்லிக் கொள்கிறார்.

## நாதஸ்வர கலைஞ்களின் இயல்பு

நாதஸ்வரக் கலைஞர்களுக்கு சில குணாதியங்களும் பழக்கவழக்கங்களும் பொதுவாக உள்ளன. கலைஞர்கள் மீசை வைத்துக்கொள்வது கிடையாது. உடை அலங்காரத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பார்கள். சிலுக்கு ஜிப்பா வே~ ்டி அணிவதுடன், தங்கமுலாம் பசப்பட்ட நகைகள், மோதிரங்கள் அணிந்து கொள்வர். நாயனம் வாசிப்பவர்கள் அவர்களுக்கான தோற்றத்தில் வாசிப்பது தான் இயல்பாகும். இவர்கள் வெற்றிலை போடுபவர்களாக கூறப்படுகின்றது. எண்ணெய் தடவிய நீண்ட தலைமுடி, சில்க் ஜிப்பாவும் வே~டியும் அணிந்திருந்தார் இரண்டு கைகளிலும மோதிரங் ்கள் மின்னின. எதுவும் தங்க மோதிரமில்லை. அலங்காரத்திற்காக வாங்கிய கல் மோதிரங்கன் ஜிப்பா வெற்றிலையைச் சுருட்டி திணிநிதிருந்தான்.

நாதஸ்வரக் கலைஞர்கள் தங்களுக்கான தோற்த்துடன் தான் இசைப்பர். இன்றை காலங்களில் சிலுக்கு ஜிப்பா அணிவது இல்லாமல் வே~ ்டி சட்டை அணிவதுண்டு. அணிகலன்களுக்கு முக்கியத்துவம் கொடுப்பதில்லை. ஆனால் இன்றும் வெற்றிலை போடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளனர்.

## இலக்கியங்களில் நாதஸ்வரம்

சங்க இலக்கியங்களில் பல வகையான இசைக்கருவிகள் பற்றி செய்திகள் கூறப்படுகின்றன. அவற்றில் 'நெடுவங்கியம்" என்பது இன்று நாதஸ்வரமாகத் திழ்கிறது. இதனை

“கண்விடு தூம்பிற் களிற்றுயிர் தொடுமின்”-5

நெடுவங்கியம் பற்றி குறிப்புகள் காணப்படுகின்றன. விறலி பலவிதமான இசைக்கருவிகளை வாசிக்கச் செய்கிறாள். அதில் யானையின் தும்பிக்கை போன்று துளையுள்ள நெடுவங்கியம் வாசிப்பாதாகக் காட்டப்படுகிறது. அந்நெடுவங்கியம் நாதஸ்வரத்தைப் போன்ற அமைப்பு முறையில் உள்ளது. நெடுவங்கியத்தின் அமைப்பு முறை நாதஸ்வரத்தை போன்றுள்ளது. அதனை போன்று

“செறிநடைப் பிடியொடு களிறு புணர்ந்தென்னக்

குறுநெடுந் தூம்பொடு முழுவுப் புணர் ்ந்து இசைப்ப”-6

என்ற வரிகள் மூலம் அறியலாம்.

## இசையின் தன்மை, இசைக் கலைஞர்கள்

மனிதனின் உள் உணர்வுகளை வெளிப்படுத்தும் கருவியாக அமைவது கலைகள். ஆயக்கலைகள் அறுபத்து நான்கினையும் ‘ஏய உணர்விக்கும் என் அம்மை’ எனும் கம்பனின் பாடல் மூலம் கலைகள் அறுபத்து நான்கு வகைப்படும். இசையானது மனிதனின் மனதை இனிமையாக்கக்கூடிய இயல்புடையது. வாசிக்கக்கூடிய கலைஞன் மனதால் ஒன்றிணைந்தால் வாசிப்பே புதுவிதத் தன்மையாக மாறிவிடும். இதனை,

> ‘வாசிப்பவன் தானே அதன் கர்த்தா அவன் மனது ஒன்றிப்போய்விட்டால் வாத்தியம் கையில் இருப்பதே தெரியாது தானே. வாள்வீரர்கள் இடுப்பில வாள் தொங்குவதை ஒருபோதும் சுமையாக நினைக்கவே மாட்டார்களாம். வாத்தியக்காரர்களும் அப்படித்தானே’

நாதஸ்வரக் கலைஞர்களுக்கு மூன்றாவது கையாக இசைக்கருவி உள்ளது. நாதஸ்வரத்தில் இருக்கும் சிவாளிகளில் இருந்துதான் இசையானது தோன்றும் அவற்றில் சிவாளிகள் பல இருந்தாலும் வாசிக்கக்கூடிய கலைஞர்கள் ஏற்ுறதாக ஒன்றோ இரண்டோ தான் இருக்கும். நாதஸ்வர இசையின் இனிமையால் வெளிநாட்டவரும் கற்றுக்கொள்ள ஆர்வம் கொள்வர்.

## நாதஸ்வரக் கலைஞர்களின் தொழில்நிலை

நாதஸ்வரக் கலையானது முந்தைய காலத்தில் மங்கள நிகழ்வுகளுக்கு முக்கியமாக ஒன்றாக கருதப்பட்டது. சாதிவர்க்க நிலைப்பாடு மாறிய பின்பாக கலைஞர்கள் இழிவாக நடத்தப்பட்டனர். அவர்களுக்கு சரியான ஊதியம் கொடுக்காமல் கச்சேரிக்கு கூப்பிடுபவர்கள் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டு அவமதித்துள்ளனர். திருவிழாவில் வாசிப்பதற்காக நாதஸ்வரக் கலைஞகர்களை வரவழைத்தனர். ஊருக்குள் இரண்டு சாதியினரக்கு இடையில் சண்டை என்பது தெரியாமல் வாசித்த கலைஞர்களை அடித்தது மட்டுமில்லாமல் அவமதித்து அவர்களை ஊருக்கு வெளியே மரத்தில் கட்டிப்போட்டு அவமானப்படுத்தினர். அதிலிருந்து அவமானப்பட்டு உயிர் பிழைப்பதற்காக தப்பிப்பிழைத்து ஓடினர். ஒரு கலைஞனுக்கு இவ்வகையான நிலை ஏற்படுதல் கூடாது.

> “நாயக்கார நாயி எங்க வந்து திமிர காட்டுறே என சிலர் ஆவேசமாக
> கத்தியபடியே இடையில் நுழைந்து தாங்களும் அடிக்க துவங்கினார்கள்.
> பக்கிரி வலியைக் பொறுத்துக் கொண்டபடியே விழுந்து கிடந்தான்.”[-7]

நாயனம் வாசிப்பவர்கள் அடித்ததை எதிர்த்து குரல் கொடுத்ததற்காக அவர்களை இம்முறையில் நடத்தினர். மங்கள வாத்தியத்திற்காக மட்டுமில்லாமல் ஊசி பெரியோர்களாக மதிக்கக்கூடியவர்களைச் சிறப்பு செய்யவும், நாதஸ்வரம் வாசிக்கப்படுகிறது.

## <u>முடிவுரை:-</u>

சஞ்சாரம் நாவலில் நாதஸ்வரக் கலைஞர்களின் வறுமை , சாதிய ஒதுக்கல் மற்றும் மங்கல இசைக்கு பின்னால் உள்ள அவல வாழ்வைச் சித்தரிக்கிறது. இக்கலைஞர்கள் நாடோடித்தனமான வாழ்க்கை, சமூக ஏற்றத்தாழ்வுகள் மற்றும் வாழ்வாதாரப் போராட்டங்களை எதிர்கொள்கின்றனர். வெளிநாட்டவரும் இசை கற்றுக்கொள்வதாக காட்டப்படுகிறது. நாதஸ்வரக் கலைஞர்களின் வாழ்வியல், பாரம்பரியம், சமூக மாற்றங்களுக்கிடையிலான போராட்டத்தை மையமாகக் கொண்டது.

### <u>அடிக்குறிப்பு:</u>

1. குறள் எண் -66
2. மயிலை சினி வேங்கடசாமி, தமிழ் வளர்த்த அழகுக் கலைகள் ப 79
3. எஸ். ராமகிருஷ்ணன், சங்சாரம், ப 9
4. மேலது ப 132
5. புறநானூறு பா எண் 348
6. அகநானூறு பா 301

7. எஸ். ராமகிருஷ்ணன், சங்சாரம், ப 9

© 2026 முனைவர்.பசுபதி த. This is an open-access article distributed under the terms of the CC BY 4.0 licence, which permits use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited. Published by / வெளியீடு: Department of Library, Nallamuthu Gounder Mahalingam College, Pollachi..